பால் விநியோகம் செய்யப்படுகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 595, திரு. கோ. நயினா முகமது, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.*

595—

தொழிற் பயிற்சிப் பள்ளி

***29552**—*அ*—**திரு. கோ. நயினா முகமது:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூர் ஒன்றியப் பகுதிகளில் தனியார் மூலமோ அல்லது அரசு சார்பிலோ தொழிற் பயிற்சிப் பள்ளி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தொழிற் பயிற்சிப் பள்ளி தொடங்க எப்போது அனுமதி வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) கடையநல்லூரில் 'எவரெஸ்ட் ஐ.டி.ஐ.' என்ற பெயரில் தனியார் தொழிற் பயிற்சிப் பள்ளி இயங்கி வருகிறது.

(ஆ) எழவில்லை.

திரு. கோ. நயினா முகமது: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் ஒன்றியப் பகுதியில் மேலும் சில தனியார் தொழிற் பயிற்சிப் பள்ளிகள், புதிதாகத் தொடங்க அனுமதி கேட்டால் அனுமதி அளிக்கப்படுமா அல்லது தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் சேர அதிக மாணவர்கள் வருகின்ற காரணத்தால், அரசின் சார்பாக அங்கே இன்னொரு தொழிற் பயிற்சிப் பள்ளியை அமைக்க அரசே முன்வருமா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலே மட்டும் அரசு ஐ.டி.ஐ. நான்கு இருக்கின்றன. தனியார் ஐ.டி.ஐ. 24 இருக்கின்றன. ஆனால் உறுப்பினர்*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

2000 மே 11]

தொகுதியான கடையநல்லூரிலே ஏற்கெனவே எவரெஸ்ட் ஐ.டி.ஐ. இருப்பதால், மேலும் ஐ.டி.ஐ. தொடங்க அனுமதி கேட்டால், அரசு அதைப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *596*, திரு. க. மணிவர்மா. மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

596—

சார்பதிவாளர் அலுவலகம்

***25311—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, தச்சம்பட்டில் பத்திரப் பதிவு அலுவலகம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தண்டராம்பட்டு தொகுதி, தச்சம்பட்டில் புதிய சார்பதிவாளர் அலுவலகம் திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. க. மணிவர்மா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தச்சம்பட்டு பகுதியிலிருந்து பல்வேறு கிராம மக்கள் திருவண்ணாமலையிலும், அருகில் உள்ள நாரையூர், அண்டம்பள்ளம், ஆனநந்தல், மதுராம்பட்டு, கரிப்பூர் போன்ற கிராமத்து மக்கள் வேட்டவலத்திலும், கண்டியாங்குப்பம், பழையனூர், தலையாம்பள்ளம், பரையம்பட்டு, நரியாம்பட்டு போன்ற கிராம மக்கள் தண்டராம்பட்டிலும் *30* கிலோ மீட்டர் தூரம் சென்றுதான் பத்திரப் பதிவு செய்கின்ற நிலைமை உள்ளது. திருவண்ணாமலையில் இருக்கிற அரசு அதிகாரிகள் இதற்காகப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்களுடைய இன்னல்களைப் போக்குகிற வகையில், *30* கிலோ மீட்டர் தூரம் சென்றால்தான் பத்திரப் பதிவு செய்ய முடியும் என்ற நிலைமையை மாற்றிட, தச்சம்பட்டில் இந்த ஆண்டே ஒரு சார்பதிவாளர் அலுவலகம் தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதை மறுபரிசீலனை செய்து, ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.